ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2020.07.31 |

## கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் 2020 யூலையில் அதிகரித்தது

**முதன்மைப் பணவீக்கம்**

ஆண்டுக்கு ஆண்டுப் பணவீக்கம் : 4.2%
ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் : 4.8%
மாதாந்த மாற்றம் : 0.1%

**மையப் பணவீக்கம்**

ஆண்டுக்கு ஆண்டுப் பணவீக்கம்: 3.2%
ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் : 4.0%
மாதாந்த மாற்றம் : 0.2%







கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (கொநுவிசு 2013=100)[1] ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம் 2020 யூனின் 3.9 சதவீதத்திலிருந்து 2020 யூலையில் 4.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதற்கு, 2019 யூலையில் நிலவிய தாழ்ந்த தளத்திலான புள்ளிவிபரவியல் தாக்கங்களுடன் சேர்ந்து உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட மாதாந்த அதிகரிப்பே முக்கிய தூண்டுதலாக அமைந்தது. உணவுப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு) 2020 யூனின் 10.0 சதவீதத்திலிருந்து 2020 யூலையில் 10.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. மேலும், உணவல்லாப் பணவீக்கமும் (ஆண்டுக்கு ஆண்டு) 2020 யூனின் 1.4 சதவீதத்திலிருந்து 2020 யூலையில் 1.5 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது.

ஆண்டுச் சராசரி அடிப்படையில் அளவிடப்படுகின்ற கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் மாற்றமானது 2020 யூனின் 4.7 சதவீதத்திலிருந்து 2020 யூலையில் 4.8 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது.

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் மாதாந்த மாற்றமானது முக்கியமாக உணவு வகையிலுள்ள பொருட்களில் அவதானிக்கப்பட்ட விலை மாற்றங்களின் தேறிய தாக்கத்தின்

[1] கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (2013 = 100) தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றது.

முக்கிய காரணமாக 0.1 சதவீதம் கொண்ட மாற்றத்தினைப் பதிவுசெய்தது. உணவல்லா வகையில் சுகாதாரம் (தனியார் வைத்தியசாலைகள்/ மருத்துவ மனைகள் என்பனவற்றிற்கான கொடுப்பனவுகள்) துணை வகையின் விலைகள் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்தன. அதேவேளை உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகளும் 2020 யூலையில் சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தன.

பொருளாதாரத்தின் அடிப்படை பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கமானது (ஆண்டுக்கு ஆண்டு) 2020 யூனின் 3.1 சதவீதத்திலிருந்து 2020 யூலையில் 3.2 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது. எனினும், ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம் 2020 யூனின் 4.2 சதவீதத்திலிருந்து 2020 யூலையில் 4.0 சதவீதத்திற்கு அதன் பதினாறாவது மாத தாழ்ந்த அளவிற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது.

**தரவு இணைப்பு:**

**அட்டவணை 1: கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகள் (2013 = 100)**

| ஆண்டு | மாதம் | சுட்டெண் | | மாதாந்தச் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவி சுட்டெண் | கொநுவிசு (மைய) |
| 2018 | சனவரி | 122.8 | 125.6 | -0.1 | 0.6 | 5.8 | 3.5 | 6.6 | 5.6 |
| | பெப்புருவரி | 121.9 | 125.8 | -0.7 | 0.2 | 4.5 | 3.5 | 6.4 | 5.3 |
| | மாச்சு | 121.4 | 125.9 | -0.4 | 0.1 | 4.2 | 3.4 | 6.1 | 5.0 |
| | ஏப்பிறல் | 121.5 | 126.2 | 0.1 | 0.2 | 3.8 | 3.5 | 5.9 | 4.7 |
| | மே | 122.9 | 126.4 | 1.2 | 0.2 | 4.0 | 3.2 | 5.7 | 4.5 |
| | யூன் | 125.4 | 127.0 | 2.0 | 0.5 | 4.4 | 3.4 | 5.6 | 4.4 |
| | யூலை | 125.8 | 127.3 | 0.3 | 0.2 | 5.4 | 3.9 | 5.6 | 4.3 |
| | ஓகத்து | 125.8 | 127.5 | 0.0 | 0.2 | 5.9 | 3.7 | 5.6 | 4.1 |
| | செத்தெம்பர் | 124.9 | 128.0 | -0.7 | 0.4 | 4.3 | 3.8 | 5.4 | 3.9 |
| | ஒத்தோபர் | 124.6 | 128.1 | -0.2 | 0.1 | 3.1 | 3.8 | 5.0 | 3.8 |
| | நவெம்பர் | 126.2 | 128.9 | 1.3 | 0.6 | 3.3 | 3.4 | 4.6 | 3.6 |
| | திசெம்பர் | 126.3 | 128.8 | 0.1 | -0.1 | 2.8 | 3.1 | 4.3 | 3.5 |
| 2019 | சனவரி | 127.4 | 132.5 | 0.9 | 2.9 | 3.7 | 5.5 | 4.1 | 3.7 |
| | பெப்புருவரி | 126.8 | 132.6 | -0.5 | 0.1 | 4.0 | 5.4 | 4.1 | 3.8 |
| | மாச்சு | 126.6 | 133.0 | -0.2 | 0.3 | 4.3 | 5.6 | 4.1 | 4.0 |
| | ஏப்பிறல் | 127.0 | 133.1 | 0.3 | 0.1 | 4.5 | 5.5 | 4.1 | 4.2 |
| | மே | 129.0 | 134.2 | 1.6 | 0.8 | 5.0 | 6.2 | 4.2 | 4.4 |
| | யூன் | 130.2 | 134.4 | 0.9 | 0.1 | 3.8 | 5.8 | 4.2 | 4.7 |
| | யூலை | 130.0 | 134.6 | -0.2 | 0.1 | 3.3 | 5.7 | 4.0 | 4.8 |
| | ஓகத்து | 130.1 | 134.6 | 0.1 | 0.0 | 3.4 | 5.6 | 3.8 | 5.0 |
| | செத்தெம்பர் | 131.1 | 135.2 | 0.8 | 0.4 | 5.0 | 5.6 | 3.9 | 5.1 |
| | ஒத்தோபர் | 131.3 | 135.2 | 0.2 | 0.0 | 5.4 | 5.5 | 4.0 | 5.3 |
| | நவெம்பர் | 131.7 | 135.5 | 0.3 | 0.2 | 4.4 | 5.1 | 4.1 | 5.4 |
| | திசெம்பர் | 132.4 | 135.0 | 0.5 | -0.4 | 4.8 | 4.8 | 4.3 | 5.5 |
| 2020 | சனவரி | 134.6 | 136.5 | 1.7 | 1.1 | 5.7 | 3.0 | 4.5 | 5.3 |
| | பெப்புருவரி | 134.6 | 136.9 | 0.0 | 0.3 | 6.2 | 3.2 | 4.6 | 5.1 |
| | மாச்சு | 133.4 | 136.9 | -0.9 | 0.0 | 5.4 | 2.9 | 4.7 | 4.9 |
| | ஏப்பிறல் | 133.6 | 137.2 | 0.1 | 0.2 | 5.2 | 3.1 | 4.8 | 4.7 |
| | மே | 134.2 | 138.1 | 0.4 | 0.7 | 4.0 | 2.9 | 4.7 | 4.4 |
| | யூன் | 135.3 | 138.6 | 0.8 | 0.4 | 3.9 | 3.1 | 4.7 | 4.2 |
| | யூலை | 135.4 | 138.9 | 0.1 | 0.2 | 4.2 | 3.2 | 4.8 | 4.0 |

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்